## ஆளணி

ஆளுநர் திரு. டி. டபிள்யூ. இராஜபத்திரான அவர்கள், பாங்காக்கில் நடைபெறும் மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள 1966, சனவரி 31ஆம் திகதி இலங்கை விட்டுச் சென்று, 1966, பெப்புருவரி 8ஆம் திகதி மீண்டார்.

சர்வதேச நாணய நிதியில் மாற்றீட்டு ஆளுநராகப் பதவியாற்றும் ஆளுநர், நிதியமைச்சர் கௌரவ யு. பி. வன்னிநாயகவுடன், கனடாவிலுள்ள மொன்றியேலில் நடைபெற்ற பொதுநலவமைப்பு நாடுகளின் நிதியமைச்சர்களது மாநாட்டிற்கும், வாஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியினதும், சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கியினதும் வருடாந்தக் கூட்டங்களுக்கும் சென்றூர். அவர், 1966, செத்தெம்பர் 10ஆம் திகதி இலங்கை விட்டுச் சென்று, 1966, ஒற்றோபர் 16-ஆம் திகதி மீண்டார்.

ஆளுநர் நாட்டிலில்லாத மேற்குறிப்பிட்ட காலப்பகுதிகளின்போது, சிரேட்ட துணை ஆளுநராகிய திரு. டபிள்யூ. தென்னக்கோன் அவர்கள், நாணய விதி அதிகாரச் சட்டத்தின் 24ஆம் பிரிவிற்கிணங்க, பிரதான நிறைவேற்றும் உத்தியோகத்தராகக் கடமையாற்றினுர்.

திரு. எச். ஜே. சமரக்கொடி அவர்கள் பொதுநலவமைப்பு நிதியமைச்சர்கள் மாநாட்டிற்கும், உலகவங்கி, சர்வதேச நாணய நிதிக்கூட்டங்களிற்கும் சென்றிருந்த காலப்பகுதியின்போது, நிதியமைச்சின் பதில் நிரந்தரச் செயலாளராகக் கடமையாற்றிய வரும், தேசியமய சேவைகள் அமைச்சின் நிரந்தரச் செயலாளருமாகிய திரு. எம். இராஜேந்திரா அவர்கள், வங்கியின் உத்தியோகபூர்வ அங்கத்தினராகக் கடமையாற்றினுர்.

மனிலாவில் ஆசிய அபிவிருத்தி வங்கியை நிறுவும் பணி தொடர்பாக முதலில் விடப்பட்ட துணை ஆளுநராகிய திரு. டி. சி. குணசேகரா அவர்கள், பின்னர் 1966, நவெம்பர் 24ஆம் திகதி முதல் மத்திய வங்கியின் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுர்.

திரு. காமினி கோறியா அவர்கள், அமைப்புத்திட்ட பொருளாதார அலுவல் அமைச்சின் நிரந்தரச் செயலாளராகத் தொடர்ந்தும் அரசாங்க சேவையில் பணியாற்றினுர்.

திரு. எஸ். ஈ. பி. ஜான்ஸ் அவர்கள், செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியாகவுள்ள தமது கடமைகளுடன், 1966, எப்பிறல் 1-ஆம் திகதி முதல் ஆளுநரின் உதவியாளராக நியமனம் செய்யப்பட்டார். 1966, திசெம்பர் 1ம் திகதி முதல் திரு. ஜான்ஸ் அவர்கள், மத்திய வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றிலுள்ள ஊழியர்களின் சம்பளங்கள், வரும்படிகள், படிகள் ஆகியன பற்றிய திட்டமொன்றினை ஆய்வதற்கென நிதியமைச்சரால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவுக்குத் தலைவராக விசேடப்பணியாற்றுவதற்கு, செலாவணிக் கட்டுப்பாட்டு அதிகாரியாகவுள்ள தமது கடமைகளிலிருந்தும் விடுவிக்கப் பட்டார்.

வங்கி மேற்பார்வை இயக்குநராகிய திரு. பி. வி. எம். பெர்னுண்டோ அவர்கள், வழக்கமான தமது கடமைகளுக்குக் கூடுதலாக, திரு. எஸ். ஈ. பி. ஜான்ஸ் அவர்கள் மேற்கூறப்பட்டுள்ளபடி விசேடப் பணிக்காக விடுவிக்கப்பட்டதுடன், 1966, திசெம்பர் 1ஆம் திகதி முதல் பதில் செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியாக நியமனம் செய்யப்பட்டார்.

பொருளாதார ஆராய்ச்சிப் பதில் இயக்குநராகிய கலாநிதி டபிள்யூ. எம். திலகரத்ன அவர்கள், 1966, எப்பிறல் 1ஆம் திகதி முதல் பொருளாதார ஆராய்ச்சி இயக்குநராக நியமனம் செய்யப்பட்டார்.

திரு. பி. எச். சிறிவர்தன அவர்கள், ஐக்கிய நாடுகள் தாபனத்துடன் பிரதேசங்களுக்கிடையான திட்டவமைப்பு ஆலோசனையாளராகத் தொடர்ந்தும் பணியாற்றினுர்.

ஆசிய அபிவிருத்தி வங்கி சம்பந்தமான வேலையின் பொருட்டு 1966, மே 1ஆம் திகதி முதல் வங்கியின் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட திரு. எப். ஆர். எஸ். வீரரத்தின அவர்கள், 1966, நவெம்பர் 24ஆம் திகதி முதல் வங்கியின் சேவையிலிருந்து இராஜினாமாச் செய்தார்.

திரு. எஸ். கணேசதாசன் அவர்கள், சர்வதேச நாணய நிதியில் தொடர்ந்தும் பணியாற்றினுர்.

கலாநிதி டபிள்யூ. இராசபுத்திரம் அவர்கள், தொடர்ந்தும் மேலுமோர் ஆண்டு ஐக்கிய நாடுகள் தாபனப் பணிப்பில் பொருளியற் புள்ளியியலாளராக (தேசிய கணக்குகள்) இராக்கில் கடமையாற்றினுர்.

ஐக்கிய நாடுகள் தாபனப் பணிப்பொன்றில் சோமாலியா அரசாங்கச் சேவையிலே, சோமாலியா தேசிய வங்கியில் பொருளியலாளர் / புள்ளியியலாளராகக் கடமையாற்றிய திரு. பி. சி. டயஸ் அவர்கள், 1966, பெப்புருவரி 26ஆம் திகதி தொடக்கம் மத்திய வங்கியின் சேவையிலிருந்து இராஜிநாமாச் செய்தார்.

கலாநிதி எம். ஆர். பி. சல்காது அவர்கள், சர்வதேச நாணய நிதியிற் பதவியொன்றினை ஏற்பதன் பொருட்டு, 1966, மே 4ஆம் திகதி முதல் ஒன்றிலிருந்து இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு வங்கியின் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

மீளப்பார்வையிடும் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் மத்திய வங்கி அலுவலாளர், ஒன்றில் தற்காலிகமாக அரசாங்கத்தில் பணியாற்ற கொடுத்துதவப்பட்டோ, அன்றித் தொடர்ந்து அரசாங்கத்தில் பணியாற்றியோ உள்ளனர்.

கலாநிதி டபிள்யூ. எம். திலகரத்ன அவர்கள், வரி விசாரணை ஆணைக்குழுவுக்குப் பொருளியல் ஆலோசகராக, பகுதி-நேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கல்லோயா அபிவிருத்திச் சபையினுல் ஆற்றப்பட்ட சேவையை மதிப்பீடு செய்யும் குழுவில் அங்கத்தினராகப் பணியாற்றும் பொருட்டு கலாநிதி எஸ். பீ. டி. சில்வா அவர்கள், பகுதி-நேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

1966, பெப்புருவரி 1ஆம் திகதி முதல் வங்கியின் சேவையிலிருந்து இராஜிநாமாச் செய்த கலாநிதி டி. எம். கன்னங்கரா அவர்களின் இடத்தில், திரு. எம். பி. பெரேரா அவர்கள், காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஒரு இயக்குநராகவும், வர்த்தக வியாபார அமைப்பின் பொருளியல் ஆலோசகராகவும் பதவியேற்பதற்கு விடுவிக்கப்பட்டார். கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் இயக்குநர்கள் சபையில் ஒரு அங்கத்தினராக முன்பு கடமையாற்றிய திரு. பெரேரா அவர்கள், 1966, திசெம்பர் 13ஆம் திகதி முதல் அச் சபையிலிருந்து இராஜிநாமாச் செய்தார்.

தனியார்துறையிலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் உள்ள முதலாளி-ஊழியர்கள் இடையிலான இலாபப்-பகிர்வு திட்டமொன்றினை ஆராயும் விசாரணை ஆணைக்குழுவிற்குச் செயலாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த திருமதி. ஜி. குணவர்தன அவர்கள், 1966, நவெம்பர் 30-ஆம் திகதியன்று மத்திய வங்கியில் மீண்டும் கடமையேற்றுர்.

திரு. எச். ஆர். டி. சொய்சா அவர்கள், வரி விசாரணை ஆணைக்குழுவுக்கு உதவிப் பொருளியல் ஆலோசகராகப் பணியாற்றுவதற்கு பகுதி-நேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டார்.

கலாநிதி உஸ்வத்த ஆராய்ச்சி அவர்கள், அமைப்புத்திட்ட பொருளாதார அலுவல் அமைச்சிற் பணியாற்ற, முதலில் ஓராண்டு காலத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளார்.

திருவாளர்கள் எம். எம். செனவிரத்ன, டி. ஆர். சிறிவர்தன, கலாநிதி என். இராமச்சந்திரன், என் எம். கப்பாகொட ஆகியோர், அமைப்புத்திட்ட பொருளாதார அலுவல் அமைச்சில் தொடர்ந்தும் பணியாற்றினர்.

திரு. பி. பீ. கரந்தவெல அவர்கள் நிதியமைச்சில் தொடர்ந்தும் பணியாற்றினுர்.

முன்புபோல் மத்திய வங்கியின் அலுவலாளர் பலர் அரசாங்கத்தினுல் நியமிக்கப்பட்ட பல்வேறு குழுக்களில் அங்கம் வகித்து அரசாங்கத்திற்குத் தொடர்ந்து பணிபுரிந்தனர்.